சூரிய காந்தி
SOORIYA GANDHI

விலை ரூபா 5-00

மலர் 1 புதன்கிழமை 18 - 2 - 1998 இதழ் 17

வினோவின் தரம்
என்றும் நிரந்தரம்

புதிய சிங்கப்பூர் டிசைன் நகைகள்
22 கரட் நகைகள் பெற
நம்பிக்கையான இடம்

வினோ நகைப் பூங்கா

185, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

# ராமமூர்த்தி எம்.பி. மீது குண்டு வீச கட்சி உறுப்பினர் பேரம் பேசினார்

## பொலிஸில் முறைப்பாடு

பாராளுமன்ற உறுப்பினர் என். ஆர். ராமமூர்த்தி மீது கைக்குண்டு வீசுமாறு என்னிடம் தமிழ்க் கட்சியைச் சேர்ந்த ஒரு உறுப்பினர் பேரம் பேசினார் என யாழ்ப்பாணம் மாட்டீன் வீதியைச் சேர்ந்த எவ். எஸ். ஜெயரட்ணம் யாழ். பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

இப் பேரம் பேச்சு இரண்டு தடைவைகள் நடை பெற்றதாகவும் குறிப்பிடப் பட்ட விடயத்திற்கு தான் மறுப்பு தெரிவித்ததைத் தொடர்ந்து தன்னிடம் கைக்குண்டு ஒப்படைக்கப் பட்டதாகவும் இதே வேளை இக் கட்சி உறுப்பினர் ஒருவரை அவ் வீட்டில் தங்க வைக்க வேண்டும் என வற்புறுத்தப் பட்டதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

பொலீஸ் முறைப்பாட்டைத் தொடர்ந்து மேற்படி பாராளுமன்ற உறுப்பினரின் வாக்கு மூலமும், சம்பந்தப் பட்ட கட்சியில் பேரம் பேசிய

(6 ம் பக்கம் பார்க்க)

## மிருசுவிலில் நடைபெற்ற மோதலில் ஆயுதங்கள் மீட்பு

### விடுதலைப்புலிகள்

நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் மிருசுவில் பகுதியில் வீதித்தடைகளை அகற்ற வந்த ராணுவத்தினருக்கும் விடுதலைப்புலிகளிற்கும்இடையில் கடும் மோதல் இடம் பெற்றது. இம் மோதலில் ஒரு அதிகாரி உட்பட 7 ராணுவத்திற்கு மேற்பட்டோர் கொல்லப்பட்டனர் பலர் காயம். அடைந்தனர் இத் தாக்குதலின் போது விடுதலைப் புலி உறுப்பினர் ஒருவரும் கொல்லப்பட்டார்.

இத்தாக்குதலில் புலிகளால் கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் விபரம் வருமாறு.

ஏகே. எல் எம் ஜி -01 ரி- 56 பட்மொடல் துப்பாக்கி -01ரி- 56 -2துப்பாக்கி 04கள் தொலைத் தொடர்பு சாதனட் -01 உட்பட மேலும் பல ராணுவ உபகரணங்கள் விடுதலைப்புலிகளால் கைப் பற்றப்பட்டன.

## மிருசுவில் வடக்கு புலிகளின் சடலத்தை ச. செஞ்சிலுவை கையேற்பு

(யாழ்ப்பாணம்)

மிருசுவில் வடக்கில் நேற்று முன்தினம் நடை பெற்ற மோதலில் கொல்லப்பட்ட விடுதலைப் புலி உறுப்பினரின் சடலம் நேற்று மாலை யாழ் போதனா வைத்திய சாலையில் இருந்து சர்வதேச செஞ்சிலுவை சங்கத்தினால் பொறுப்பு ஏற்கப்பட்டது.

சாவகச்சேரி பொலீஸாரால் நண்பகல் 12.30க்குபோதனாவைத்திய சாலையில்ஒப்படைக்கபபட்ட இச்சடலத்தை பிற்பகல் 4. 30க்கு சர்வதேச செஞ்சிலுவை சங்கம் போதனாவைத்தியசாலையில் இருந்து பெற்று கொன்டுள்ளது.

## உள்ளூராட்சி சபைகளுக்கான பதவிப்பிரமாணம் இல்லை

யாழ் மாவட்டம், கிளிநொச்சி மாவட்ட பச்சிலைப் பள்ளி பகுதிகளில் நடைபெற்ற உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் முடிவுகளை அடுத்து இன்று அச்சபை உறுப்பினர்கள் சத்தியப் பிரமாணம் மேற்கொள்வதாக திகதி நிர்ணயம் செய்யப்பட்டது.

ஆனால் நேற்றுவரை இதற்கான எந்த ஒரு முயற்சியும் நடைபெறவில்லை. இது தொடர்பாக உள்ளூராட்சி பிரதி ஆணையாளர் மற்றும் உள்ளூராட்சி சபை ஆணையாளர்களிடம் மேற்படி சத்தியப் பிரமாணம் செய்வது தொடர்பாக தொடர்பு கொண்டபோதும்

(6 ம் பக்கம் பார்க்க)

## அந்தஸ்து உள்ளவர்களைத் தேடி தமிழ்க்கட்சிகள் தீவிர வேட்டை

(யாழ்ப்பாணம்)

உள்ளூராட்சி சபை தேர்தலில் போட்டியிட்ட உறுப்பினர்களின் இராஜினாமாவும் அதனை தொடர்ந்து புதிய அங்கத்தவர்களை நியமனம் செய்வதிலும் தமிழ் கட்சிகள் முன்னனியில் செயல் பட்டு வருகின்றனர்.

இது தொடர்பாக தமிழ் கட்சிகளிடம் கருத்து கேட்ட போது ''எமது கட்சியில்சிலர் போட்டியிட விரும்பாமல் யாரும் பலவந்தப் படுத்தி தேர்தலில் இவர்களை போட்டியிட வைத்தோம். இப்போது அவர்களை இராஜினாமா செய்யும்படி கேட்கின்றோம் இதில் தவறு இல்லை'' என பொதுப்படையாக தெரிவிக்

(6 ம் பக்கம் பார்க்க)

## தப்பியோடி திரும்பி வந்த படையினருக்கு வரவேற்பு

முப்படைகளிலிருந்தும் தப்பியோடி மீண்டும் படைகளில் இணைந்துள்ள வீரர்களை அவர்களது தோழர்கள் மகிழ்ச்சியுடன் வரவேற்றனர்.

வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு, அனுராதபுரம் ஆகிப பகுதிகளில் கடமையாற்றும் படையினரே தமது தோழர்களை மகிழ்ச்சியுடன் வரவேற்றதாக வடபகுதி சிரேட்ட இராணுவ அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

இவர்களுக்கு புதிய சீருடைகள் சப்பாத்துக்கள் என்பன வழங்கப் பட்டுள்ளன. இவர்களில் சிலர் வெளிநாடுகளில் வேலை பெற்றுச் சென்றுவிட்டதாகவும் இவர்களை வெளிநாடுகளுக்கு அனுப்பிய முகவர்கள் மீதும் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகவும் அந்த இராணுவ அதிகாரி மேலும் தெரிவித்தார்.

## பண்டத்தரிப்பில் 2படையினர் பலி

யாழ்ப்பாணம் பண்டத்தரிப்பு பகுதிகளில்விடுதலைப் புலிகள் நடத்தியதாக்குதலில் இரண்டு சிறிலங்கா படையினர் கொல்லப்பட்டனர் நேற்று முன் தினம் இத்தாக்குதல் நடைபெற்றதாக சிறிலங்கா பாதுகாப்பு அமைசின் நடவடிக்கை அலுவலகம் செய்தி வெளியிட்டுள்ளது.

## சரோயினி யோகேஸ்வரன் அலவி மௌலானா சந்திப்பு

யாழ். மாநகர சபையின் முதல்வராகக் பகவியேற்க இருக்கும் திருமதி சறோஜினி யோகேஸ்வரன் அவர்கள் நேற்று முன்தினம் உள்ளூராட்சிஅமைச்சர் அலவிமௌலானாவை சந்தித்து பேசி உள்ளார்'

யாழ்ப்பாணத்தில் காணப்படும் குறைபாடுகளை எடுத்துக்கூறியசறோஜினியோகேஸ்வரன் அவர்கள் மாநகரசபையின் அலுவல்களை மேற்கொள்வதற்கு ஒரு அலுவலகங்கூட தற்போது இல்லை என்பதை சுட்டிக்காட்டி உள்ளார் தற்காலிகமாக நல்லூர் கலியாண மண்டபத்திலேயே மாநகரசபைக் கூட்டத்தை கூட்டதான் எண்ணி உள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

புனரமைப்பு வேலைகளுக்கும், புதிய வேலைத்திட்டங்களுக்கும் தேவையான நிதியையும், சகல ஒத்துழைப்பையும் வழங்க தான் தயாராக இருப்பதாக அமைச்சர் அலவிமௌலான தெரிவித்

(6 ம் பக்கம் பார்க்க)

## சின்னஞ் சிறு விளம்பரங்கள்

### விளம்பரம் செய்ய

''சூரிய காந்தி''யில் விளம்பரம் செய்ய எம்மை அணுகுங்கள். பரணன் அசோசியேட்ஸ், 81, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

### சேவைகள்

பிறந்த நாள வாழ்த்து, மரண அறிவித்தல், விவாக பூப்புனித நீராட்டு சபீண்டிகரண அழைப்புக்கள், திறப்பு விழாக்கள், கோயில் மலர் வெளியீடு ஏனைய விளம்பரங்கள அத்துடன் ஏனைய சகல சேவைகளும் கமிஷன் அடிப்படையில் செய்து கொடுக்கப்படும். செ. அருளம்பலம், அருள மல்ரி சேவிசெஸ், கல்வயல், சாவகச்சேரி.

## ஜெய்ப்பூர் கால் அன்பளிப்பு

யாழ் மத்திய கல்லூரி லியோ கழகம் கோப்பாய் நாவலர் வித்தியாலயத்தில் ஆண்டு 6 இல் கல்வி கற்கும் மிதி வெடியில் தனது காலை இழந்த பூபரராசசிங்கம். திலீபன் என்ற மாணவனுக்கு ஜெய்ப்பூர் கால் ஒன்றை பொருத்தி உள்ளது. மேலும் மத்திய கல்லூரியில் தெரிந்தெடுக்கப்பட்ட மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்களும் சப்பாத்துக்களும் அன்பளிப்பாக வழங்கி உள்ளது. மேலும் ஒரு தொகுதி சப்பாத்துக்களை வழங்க லியோ கழ்கம் ஏற்பாடு செய்துள்ளது.

## விசேட அடையாளஅட்டை

யாழ் செயலக ஆட்பதிவுத்திணைக்களத்தின் விசேட அடையாள அட்டை அலுவலகம் பாடசாலை அதிபர்களுக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் மேற்படி பரீட்சை அடையாள அட்டைகளை தம்மிடமிருந்து பெற்று அந்தந்த பாடசாலைக்கு அண்மையிலுள்ள படைப்பிரிவுக் கட்டளை அதிகாரியின் மேற்பார்வையில் விநியோகம் செய்யப்படல் வேண்டுமெனவும்' பாடசாலையை விட்டு விலகிய மாணவ மாணவிகளின் விசேட அடையள அட்டைகளை தமது காரியாலத்தில் ஒப்படைக்கும் படியும் கேட்கப்பட்டுள்ளது.

## சாவகச்சேரி பிரதேச மயானங்கள்

சாவகச்சேரிப் பிரதேச சபையினரின் எல்லைக்கு உட்பட்ட அனைத்து மயானங்களும் முட்புதர்கள் நிறைந்து காணப்படுகின்றன அத்துடன் அவற்றுக்குச்செல்லும் பாதையும் முட்செடிகள் மணல்கள் நிறைந்தும் குன்றும் குழியுமாக போக்குவரத்துக்குப் பாவிக்க முடியாதுளது. பொதுமக்கள் பலர் இது குறித்து கவலை தெரிவித்துள்ளனர்.

## பொதுசன மாதாந்த உதவிப் பணம்

சமூக சேவைத் திணைக்களத்தால் பிரதேச செயலகத்தின் ஊடாக வறியமக்களுக்கு வழங்கப்படும் மாதாந்த உதவிப் பணம் தென்மராட்சி மக்களுக்கு இந்த ஆண்டு தை, மாசி மாதங்களுக்கு உரியதை இன்னமும் வழங்கப்படவில்லை. இவ் வறிய மக்கள் இதனால் பெரும் சிரமத்துக்கு உள்ளாகியிருக்கிறார்கள்.

### மார்ச் நடுப்பகுதி முதல்

# யாழ் மாவட்டம் முழுவதும் 24 மணி நேர மின் விநியோகம்

### யாழ் மின்சார சபை

எதிர் வரும் மார்ச் மாதம் நடுப பகுதி முதல் யாழ். மாவட்டம் முழுவதும்24மணி நேரமும் மின்சாரத்தினை விநியோகம் செய்யப் போவதாக இலங்கை மின்சார சபை உறுதி பூண்டுள்ளது.

இது பற்றி மேலும் தெரிய வருவதாவது 1.5 மெகா வோல்ட் வலு கொண்ட 8 மின் பிறப்பாக்கிகள் காங்கேசன் துறைக்கு வரவழைக்கப்பட்டு அங்கிருந்து 33,000 கிலோ வாட்ஸ்வலு கொண்ட இரண்டு பீடர்களின் மூலம் சுன்னாகம் மின் நிலையத்துக்கு வழங்கப்படும்.

ஏற்கனவே இவ்வேலைகள் நடந்து கொண்டிருப்பதாகவும், காங்கேசன் துறையில் இருந்து ஒன்றரை கிலோ மீற்றர் தூரம் வரை மின் விநியோக வேலை இன்னும் பூர்த்தியாக்கப்பட வேண்டியுள்ளது.

சுன்னாகத்தில் இருந்து பொன்னாலை, தென்மராட்சி, வடமராட்சி போன்ற பகுதிகளுக்கான மின் விநியோக கம்பங்களை கொழும்பு கிளை நிர்மாணிக்கவுள்ளது. ஏனைய பகுதிகளை யாழ். மின்சார சபை நிர்மாணிக்கப் போவதாக இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

### யாழ் போதனா வைத்திய சாலை

# நிர்வாகத்தின் அசமந்தப் போக்கால் நோயாளிகள் அவதியுறுகின்றனர்

யாழ்ப்பாண மக்களின் உயிர் காக்கும் உற்ற தோழனாக விளங்கும் யாழ். அரசினர் வைத்தியசாலையில் மிகவும் மலிந்து காணப்படும் குறைகளையிட்டு மக்கள் மனம் மிகவருந்துகின்றனர்; மேற்படி வைத்திய சாலையில் கடமை புரியும் ஊழியர்கள் கூட ஆஸ்பத்திரி நிர்வாகத்தின் ஆணவப் போக்கினைக் கண்டு மனம் புழுங்கிக் கொண்டிருப்பதும் சம்பந்தப்பட்ட சிலருடன் சந்தித்து உரையாடிய போது கண்டறிந்த உண்மைகளை அறியத் தருவது 'நக்கீரக்' கடமையாகும்.

- சுகாதாரத் திணைக்களத்தின் கீழ் இயங்கும் இவ் வைத்தியசாலையில் சுகாதாரம் பேணப்படுவதில்லை.
- சுகாதாரஅமைச்சினின்றும அதிகாரிகள குறைநிறைகள பற்றி அறிய வருகை தரும் காலங்களில் வைத்தியசாலை நிர்வாகம் 'தாதிய பயிற்சிப்பாடசாலை அதிபருடன்' மற்றும் ஏனைய ஊழியருடன் கலந்தாலோசிப்பதில்லை.
- நீண்டநேரம் நோயாளிகளை வைத்தியர்கள் காத்திருக்கச் செய்வதினால் இக் காலச் சூழ் நிலையில் உள்ள நோயுடன் பக்க விளைவாக மேலதிக நோய்களும் ஏற்படுகின்றன.
- இங்கு பணிபுரியும் சில வைத்திய அதிகாரிகள் தனிப்பட்ட ரீதியிலும் தொழில் புரிவதினால் அவசரக்குடுக்கைகளாகி நோயாளிகளை ஏனோ தானோ என்ற மனப்பாங்குடனும் ஆரோக்கியமில்லாத வார்த்தைகளைப் பிரயோகித்தும் நோயாளிகளை அவசரமாக அனுப்பி விட்டு பணம் சம்பாதிக்கச் செல்வதில் ஏவுகணையாக பாய்கிறார்கள்.
- சில வைத்திய அதிகாரிகளுடன் மனந்திறந்து தமது நோய்களைப் பற்றிக் கதைக்க முடியாதுள்ளது என நோயாளிகள் கண்ணீர் விட்டுக்கதறாத குறையாகத் தெரிவிக்கின்றனர். காரணம் நோயாளிகள மீது ஏறிப்பாய்வதும் எரிந்து விழுவதும்தான்)
- உளளகப் பயிற்சியில் ஈடுபட்டிருக்கும் யாழ்ப்பாண பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவர்களும் கொழும்பு வைத்தியசாலைகளில் எங்களைப் போன்று பயிற்சியில் ஈடுபடும் வைத்திய மாணவர்களுக்கு ஏற்படுத்தப்பட்டிருக்கும் வசதிகளும் வாய்ப்புக்களும் எங்களுக்கும் ஏற்படுத்தப்பட்டுத் தரவில்லையே' என்று தமது மனக்குறைகளைப் பொரிந்து தள்ளினார்கள்.
- பெருகிவருகின்ற நோயாளர்களுக்குத் தேவையான மருந்து வகைகள் உரிய நேரத்தில் கிடைப்பதில்லையென்றும் கடந்த கால போர் அனர்த்தங்களினால் சிதைந்து போயுள்ள கட்டடங்கள் முழுமையாக இதுவரை கட்டித் தரவில்லை யென்றும் மூளைசாலியான வைத்தியர்கள் வெளி நாடு மற்றும் பிற மாவட்டங்களுக்கு செல்வதில் முனைப்புடன் சந்தர்ப்பங்களை எதிர் நோக்கி காத்திருக்கின்றனரென்றும் நோயாளிகளுக்கு சிறந்த மருத்துவப்பணியாற்றிப் பிணி தீர்க்க நவீன மயப் படுத்தப்பட்ட மருத்துவக் கருவிகள் இல்லை. யென்றும் ஆஸ்பத்திரி நிர்வாகம்குறைப் படுகின்றது. (சி-1)

# முல்லைத் தீவிற்கு கல்வி உபகரணங்கள் எடுத்துச் செல்வதில் கடும் கட்டுப்பாடு

1995ம் ஆண்டு முல்லைத் தீவு மாவட்ட கல்வித் திணைக்களத்தினால் இலங்கை ஆரசிடம் விண்ணப்பிக்கப்பட்ட பாடசாலை உபகரணங்கள் மூன்று வருடங்களின் பின்னர் கேட்கப்பட்ட தொகையிலும் பார்க்க அரைவாசி தொகை அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக விவசாய மாணவர்களின் செயன் முறை தேவைகளுக்கு 50 மண்வெட்டிகளும் 10 தள்ளுவண்டிகளும் தேவை என்று விண்ணப்பிக்கப்பட்டபோது இவற்றில் அரைவாசி தொகைகளே அனுப்பிவைக்கப் பட்டுள்ளன.

இத்துடன் இரசாயன ஆய்வு கூட தேவைகளுக்கான இரசாயனப் பொருட்களுக்கும் அனுமதி மறுக்கப்பட்டதால் உயர்தர இரசாயனவியல் மாணவர்கள் செயன் முறைக் கல்வியை இழந்ததோடு பரீட்சையிலும் குறைந்த பெறு பேறுகளைப் பெற்று வருகின்றனர்.

பரீட்சைக்கான றோனியோ பிரதிகளும் வவுனியாவில் பிரதி செய்யப்பட்டே இங்கு கொண்டு வர முடியும் என்பதாலும் வெற்றுத் தாளுக்கு முற்றாக அனுமதி மறுக்கப் பட்டுள்ளதாலும் றோனியோ இயந்திரத்தை இங்கு பயன் படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

# புனித பத்திரிசியார் கல்லூரி இன்னிங்சால் வெற்றி

இம்மதம் 13 ஆம் 14 ஆம் திகதிகளில் மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் மானிபபாய் இந்துக்கல்லூரி அணிக்கும் புனித பத்திரிசியார் கல்லூரி அணிக்கும் இடையில் நடைபெற்ற 19 வயதுக்குட்பட்ட பாடசாலை கிரிக்கெட் அணிகளுக்கிடையிலான போட்டியில் புனித பத்திரிசியார் கல்லூரி அணி இன்னிங்சால் வெற்றி பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய மானிப்பாய் இந்துக்கல்லூரி 65 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. பந்துவீச்சில் தேவராஜன் 14 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் றொஸ்ரன் 20 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும் இமயகாந்தன் 7 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர். தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய புனித பத்திரிசியார் கல்லூரி அணி 115 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

இதில் திவாகரன் 25 ஓட்டங்களையும் தேவராஜன் 21 ஓட்டங்களையும் றொஸ்ரன் 19 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் ரவி 6 விக்கெட்டுக்களை கைப்பற்றினார். இரண்டாவது இன்னிங்சில் துடுப்பெடுத்தாட களத்தில் இறங்கிய மானிப்பாய் இந்துக்கல்லூரி அணியினர் தேவராஜன், றொஸ்ரன் ஆகியோரது மிகத் திறமையான பந்துவீச்சு காரணமாக 43 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தனர்.

பந்துவீச்சில் தேவராஜன் 16 ஓட்டங்களுக்கு 6 விக்கெட்டுகளையும் றொஸ்றன் 23 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர். இதனால் புனித பத்திரிசியார் கல்லூரி அணி இன்னிங்சால் வெற்றி பெற்றது.

## துடுப்பாட்ட பயிற்சி

கடந்த சனிக்கிழமை முதல் மத்திய கல்லூரி மைதானத்தில் துடுப்பாட்ட பயிற்சி நடைபெற்று வருகிறது. சென்ட்ரலைட்ஸ் விளையாட்டுக்கழகத் தலைவரும் கல்லூரியின் பழைய மாணவரும் துடுப்பாட்ட பயிற்றுனருமான . சண்முகலிங்கம் மத்திய கல்லூரி ஊழியர் தேசிகநாதன் விளையாட்டுத் துறை முதல்வர் ஆசிரியர் மகேந்திரன் ஆகியோர் பயிற்சி அளித்து வருகின்றனர்.

# சிங்கப்பூர் பிரதமர் மலேஷியா விஜயம்

மலேசியாவும் சிங்கப்பூரும் தமக்கிடையே நிலவும் இருதரப்பு பிரச்சினைக்கு தீர்வு காண திட்டங்களை வகுத்துள்ளன.

சிங்கப்பூர் பிரதமரின் இரண்டு நாள் மலஷியே விஜயத்துக்குப் பின்னர் மலேஷிய வெளிநாட்டு அமைச்சர் வெளியிட்ட கூட்டு அறிக்கை ஒன்றில் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்கு இரண்டு நாடுகளும் இணங்கியிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அல்ஜீரியாவில் 52 பேர் பலி

அல்ஜீரியாவில் மேற்கொள்ளப்பட்ட ஒரு நடவடிக்கையில் அல்ஜீரியப் படை கடந்த மூன்று நாட்களில் 52 கிளர்ச்சியாளர்களை கொன்றதோடு சட்டவிரோத தலைவரையும் அவரது 150 சகாக்களையும் கைது செய்துள்ளார்கள்.

அல்ஜீரியா தலைநகரில் இருந்து 20 கி.மீ. தொலைவான வேஜியா என்ற இடத்திலே கெரிலா அமைப்பு பற்றி கிடைத்த தகவலை அடுத்தே இச்சம்பவம் நடைபெற்றது.

## நாச்சியம்மை மயார் நினைவு தினம்

புண்ணிய நாச்சியம்மையார் தினம் நாளை காலை 8.00 மணிக்கு நீராவியடியிலுள்ள நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இவ் விழாவில் நல்லை ஆதீன முதல்வர் ஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள் கலந்து கொண்டு ஆசியுரை வழங்குவார்.

## புலமைப் பரிசில் அனுமதி

5ம் ஆண்டு புலமைப் ப்ரிசில் பரீட்சையில் சிறந்து விளங்கிய மாணவர்கள் அடுத்த மாதம் பிரபல பாடசாலையில் சேர்த்துக் கொள்ளப் படுவார்.

இது பற்றிய விபரங்கள் மேற்படி பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களின் பெற்றோர்களுக்கு "அனுப்பப் பட்டிருப்பதாக கல்வி அமைச்சு தெரிலித்துள்ளது.

## ஜீன்ஸ் அணிந்த பிரியங்கா ஆதரவாளர்

ராஜீவ் காந்தியின் மகள் பிரியங்காவின் ஆதரவாளர்கள் அவர் பெயரில் ஒரு ரசிகர் மன்றம் டில்லியில் துவங்கி உள்ளனர். இந்த ஆதரவாளர் எல்லோரும் ஜீன்ஸ் அணிந்த இளவயதுக்காரராக உள்ளனர்,

## திட்டமிட்டபடி தேர்தல்

கோயம் புத்தூரில் திட்டமிட்டபடி எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமை தேர்தல் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கோவையில் கடந் சனிக்கிழமை தொடர் குண்டு வெடிப்பு இடம்கபற்ற போதிலும் அப்பகுதிபில் தேர்தல் ஒத்திவைக்கப்படாதென தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இலங்கைக்கு 4 கோடி டொலர் நிதியுதவி

இலங்கைக்கு புதிய ஐந்து ஆண்டு அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் யு. என். டி. பி நிறுவனம் 4 கோடி டொலரை வழங்குகிறது. 2001 ஆம் ஆண்டு வரை இந் நிதியுதவி அபிவிருத்தி உதவிகளுக்கு பயன்படுத்தப் படும்.

# சூரியகாந்தி

## அரச வியாபார நிலையங்களில் மனப்பான்மை மாற வேண்டும்

எந்தத் தொழிலையும் அந்தத் தொழில் ரகசியம் தெரிந்தவர்கள் நடத்த வேண்டும். அப்போதுதான் அந்தத் தொழிலும் சிறக்கும் மக்களுக்கும் பயன் ஏற்படும்.

யாழ்ப்பாணத்தில் வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக கூட்டுறவு மொத்த விற்பனை நிலையம் அரச வர்த்தக கூட்டுத்தாபனம், சலுசல, கட்டிட பொருள் கூட்டுத்தாபனம், என்று இப்படி பல ஸ்தாபனங்கள் தங்கள் கடைகளை இங்கே பரப்பி வைத்திருக்கின்றன.

போரினால் கடுமையாகப் பாதிக்கப்பட்ட பிரதேசம் இது. வழமைக்குத் திரும்பத் துடித்துக் கொண்டிருக்கும் பிரதேசம்.

இங்கேயுள்ள மக்களுக்கு எத்தனையோ கஷ்டங்கள். இயல்பு வாழ்க்கை என்பது மாயமான் மாதிரி போக்குக் காட்டிக் கொண்டு ஓடுகிறது.

ஏதோ ஒரு பொருளுக்கு எப்படியோ தட்டுப்பாடு வந்து விடுகிறது.

இது தவிர்க்க முடியாதது அல்ல.

'வியாபாரம்' நடத்துவதற்காக கடை திறந்துள்ள அரச நிறுவனங்கள் சற்று நிதானமாகச் சிந்தித்து தனிப்பட்ட வியாபாரிகள் செய்வது போல ஒருவகையான தொழில் ஆர்வத்துடன் கடமை செய்தாலே போதும் எத்தனையோ பொருட்களுக்கு ஏற்படுகின்ற தட்டுப்பாடுகள் .நீங்குவதுடன் மக்களும் நிதான விலைக்கு எல்லாவறறையும் பெற்றுக்கொள்ள முடியும்.

கொழும்பிலிருந்து பொருட்களை யாழ்ப்பாணம் கொண்டு வருவதற்கு இந்த ஸ்தாபனங்களுக்கு நிறைய வசதிகள் இருக்கின்றன.

மூலதனத்தைப் பற்றிக் கவலை இல்லை.

கடன் கொடுக்க வேண்டும், கடன் வாங்கவேண்டும் என்ற பிரச்சனையும் இல்லை.

சுதந்திரமாகச் செயற்பட வாய்ப்புக்கள் இருக்கின்றன. கப்பல் வசதிகளைக்கூட சுலபமாக ஏற்படுத்திக்கொள்ள முடியும்.

ஆனால் -

என்ன காரணத்தினாலோ வியாபாரத்தை வியாபாரமாய் நடத்தாமல் ஏதோ அரசாங்க ''டிபார்ட்மென்ட்'' மாதிரி நடத்துகிறார்கள்.

சில வருடங்களுக்கு முன்னால் சில வியாபாரங்கள் அரசின் ஏகபோகமாக இருந்தன. அப்போது பழகிய பழக்கம் இன்னமும் விட்டுப்போக மாட்டேன் என்கிறது.

சிவப்பு நாடா அசமந்த நிலைக்கும் வியாபாரத்துக்கும் வெகுதூரம்.

இப்போது அரசாங்கத்தின் அடிப்படைக் கொள்கையே மாறிவிட்டது.

போட்டி போட்டுக் கொண்டு வியாபாரம் செய்தால் தான் பிழைக்க முடியும்,

'போட்டிவர்த்தகம்' என்ற மனப்பான்மையோடு அரச ஸ்தாபனங்கள் செயற்படுமாயின் அவர்களுக்கும் நிறைய லாபம் கிடைக்கும் மக்களுக்கும் தட்டுப்பாடு இல்லாமல் பொருட்கள் நிதானவிலையில் கிடைக்கும்.

## யூ.என்.பியின் மாற்று யோசனை தொண்டமான் எதிர்ப்பு

நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்துவது தொடர்பாக அரசு முன்வைத்துள்ள திட்டத்திற்கு ஐ.தே.கட்சி முன்வைத்த மாற்று யோசனைகள் தங்களுக்கு திருப்தியளிக்கவில்லை என்று செய்தியாளர் மாநாட்டில் அமைச்சர் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

அமைச்சர் மேலும் தெரிவிக்கையில் சிறு பான்மையினரை பிரதி நிதித்துவம் செய்யும் வகையில் உப ஜனாதிபதிகளைநியமிப்பதுபொருத்தமானது என்று ஐ.தே.கட்சி தெரிவித்த போதும் அதனால் பயன் ஏதும் ஏற்படாதெனவும் நாட்டில் தற்போது நிகழும் இனப் பிரச்சினைகளுக்கு ஐ. தே. கட்சியும், இலங்கை சுதந்திர கட்சியுமே பொறுப்பு என்றும் கூறினார்.

### இன்று கண்டி செல்லும் சாரணர்கள்!

ஐந்தாவது ''தேசிய சாரணர் ஜம்போறி''யில் கலந்து கொள்ள யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த சுமார் ஐம்பதிற்கும் மேற்பட்ட மாணவர்கள் கண்டி மாவட்டத்திலுள்ள பள்ளேகல சென்று அங்கு நிகழவிருக்கும் சாரணர் சம்பந்தப்பட்ட பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கு கொள்ள இன்று புறப்பட்டுச் செல்கின்றனர். (சி-1)

## பொலிஸ் மா அதிபரை பதவி நீக்க அரசு முடிவு

சிறிலங்கா பொலிஸ் மா அதிபர் டபிள்யூ - டிராஜ குருவை பதவியில் இருந்து விலக்குவதற்கு சந்திரிக்கா அரசு நடவடிக்கை மேற் கொண்டுள்ளது. அண்மையில் நடந்த குண்டு வெடிப்பிற்கு பாதுகாப்பு இருந்தஇவர்களே பொறுப்பு எனகுற்றம்சாட்டப்பட்டு ராஜகுரு பதவியில் இருந்து விலக்க நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டுள்ளது. ராஜகுருவை பதவியில் இருந்து விலகுமாறு சிறிலங்கா பாராளுமன்றத்திலும் அழுத்தங்கள் கொடுக்கப்பட்டு வருகின்றன.

## 'கு' வுக்கும் 'உ' வுக்கும் வித்தியாசம் தெரியாததால் வந்த குளறுபடி

திருநெல்வேலி கிராமிய வங்கிக்கு ஓய்வூதியம் பெறச் சென்றவருக்கு ஏற்பட்ட கதி.....

கடந்த கிழமை கிராமிய வங்கிக்கு ஓய்வூதிய வவுச்சர் பெறச் சென்ற கொக்குவில் கிழக்கைச் சேர்ந்த நபர் ஒருவர் தனது ஓய்வூதியக் கிளையின் வரிசையிலே 19வது நபராக நின்று கொண்டிருந்தார். தனக்குப் பின்னர் வந்த அனைவரும் ஓய்வூதியச் சீட்டினை பெற்றுச்செல்ல அவர் பல மணிநேரம் பொறுமையுடன் நின்றுகொண்டிருந்தார்.

தனக்கு இன்னமும் வவுச்சர் வழங்கப்படாமையால் பொறுமையிழந்த அவர் கணக்காளரிடம்சென்று விசாரித்தபோது உடனே வவுச்சர் வழங்கப்பட்டது.

ஆனால் அவருக்கு வழங்கப்பட்ட வவுச்சரோ வேறொரு நபருக்குரியதாக காணப்பட்டது. இவருக்கு 3000/- பெறுமதியான வவுச்சருக்கு பதிலாக 800/ பெறுமதியுடைய வவுச்சரே வழங்கப்பட்டது.

இது வவுச்சர் பெறச் சென்றவரின் குறைபாடு அல்ல. கணக்காளருடைய கவனமின்மையே ஆகும்.

உடனே தனக்குரிய வவுச்சர் பெற்றுச் சென்ற நபரை பல சிரமத்தின் மத்தியே தேடிப்பிடித்து அவருக்கு சொல்ல வேண்டிய ''திருவாசகங்கள்'' அனைத்தினையும் கூறி மீண்டும் அவ்வவுச்சரைப் பெற்று. குறிப்பிட்ட பிரதேசத்தின், பிரதேச செயலகத்துக்கு அந் நபர் சென்று வவுச்சரினை மறுபரிசீலிப்பு செய்து 5 மணிநேர தாமதத்தின் பின்னரே அவருக்குரிய வவுச்சர் கிடைக்கப்பெற்றது.

இது யாருடைய குற்றம் ''கு'' விற்கும் ''உ'' விற்கும் வித்தியாசம் தெரியாத அரச ஊழியர்களின் குற்றமா? ஒன்றும் அறியாத பொதுமக்களின் குற்றமா?

### இறுதி முயற்சியாக

## ஐ. நா. பொதுச் செயலர் பாக்தாத்திற்கு விஜயம்

ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் கோபி அணான் பாக்தாத்திற்கு விஜயம் செய்யவுள்ளார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

ஈராக் மீதான இராணுவத் தாக்குதலைத் தடுக்கும் இறுதி முயற்சியாகவே அவர் பாக்தாத் விஜயத்தை மேற்கொள்வதற்கு ஆயத்தமாகிறார் என்றும் ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையின் 5 அங்கத்துவ நாடுகளுடன் பேச்சுவார்த்தை நடத்திய பின்னரே இது பற்றி மேலும் அவர் பரிசீலிக்கவுள்ளார் எனவும் நம்பப்படுகிறது.

தாம் ஈராக்கிற்கு எடுத்துச் செல்லும் யோசனைக்கு அமெரிக்கா ஆதரவு வழங்காது விட்டாலும் மேற்கொள்ளவிருக்கும் பாக்தாத் விஜயம் தொடரும் என அவரது பேச்சுக்களில் இருந்து தெரியவந்துள்ளது.

இதே வேளை யுத்தத்தை தவிர்க்கும் வகையில் பாக்தாத்துக்கு செல்லுமாறு பாப்பரசர் வத்திக்கான் தூதுவர் மூலம் கோபி அணானிற்கு அறிக்கை ஒன்று விட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

### சீனாவில் விமான விபத்து 190 பேர் பலி

200 பேருடன் பயணம் செய்த சீன பயணிகள் விமானம் ஒன்று விபத்துக்குள்ளாகி அழிந்துள்ளது. இவ் விமானம் தாய்வானின் தாய்-வே. விமானநிலையத்திற்கு அருகே குடியிருப்புகள் மீது விழுந்து அவற்றை சேதப்படுத்தி தீப்பற்றி எரிந்து அழிந்துள்ளது. இதில் 7 பேர் மட்டுமே உயிர் தப்பி இருப்பர் என நம்பப்படுகின்றது.

### குண்டு வெடிப்பு 16 பேர் பலி

சீனாவில் பேருந்து ஒன்றில் இடம்பெற்றகுண்டுவெடிப்பில் 16 பேர் கொல்லப்பட்டனர் சீனாவின் வாங்-மாகாணத்தில் இக்குண்டு வெடிப்பு இடம்பெற்றது இதில் 30பேர் காயம் அடைந்தனர்.

### ஒன்று கூடல்

தென் கிழக்காசிய நாடுகளில் உள்ள அமெரிக்க தூதுவர்கள் அப்பிராந்தியத்தில் தொடர்ந்து நிலவும் நிதி நெருக்கடியைப் பற்றி விவாதிப்பதற்காக சிங்கப்பூரில் ஒன்று கூட இருக்கின்றார்கள்.

அமெரிக்க அதிபர் மாளிகையின் உத்தரவினை அடுத்து இக்கூட்டம் நடைபெற இருக்கிறது.

## ஈராக் எண்ணெய்க் கப்பல் வளைகுடாவில் மூழ்கியது

700 தொன் மண்ணெண்ணெய் ஏற்றிச் சென்ற ஈராக்கின் கப்பல் ஒன்று கடந்த ஞாயிற்றுக் கிழமை அன்று வளைகுடாவிற்கு அருகே மூழ்கியது.

ஐ.நா தடையையும் மீறி எண்ணெய் கடத்தப்பட்டதாக சர்வதேச துப்பறியும் படை சந்தேகித்துள்ளதாக அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

ஐக்கிய அரபு எமிரேட்டுக்கள் கரையில் இருந்து சுமார் 36கிலோமீற்றர்தொலைவிலே இக்கப்பல் மூழ்கியது என்று தெரிவிக்கப்படுகின்றது.

# 'கல்கி' கிருஷ்ணமூர்த்தி 'தினத்தந்தி' ஆதித்தன் 'குமுதம்' அண்ணாமலை சாதனை செய்த பத்திரிகையாளர்!

-சுகுமாரன்-

(நேற்றைய தொடர்ச்சி)

### சர்ச்சைகள் சர்க்கரை கட்டி

பத்திரிகைகளில் பல்வேறு விஷயங்களைப் பற்றிய சர்ச்சைகள் இடம்பெறுவதும், றி ஏதோ ஒரு கருத்தை நிலை நிறுத்துவதற்காக பிற பத்திரிகைகளோடும் மற்றும் சமூகத்தில் பிரபலமானவர்களோடும் பத்திரிகைகள் மோதுவதும், அறிவுத் தெளிவு பெறுவதற்கும் கருத்து விளக்கம் கிடைப்பதற்கும் துணை செய்யும்!

அத்துடன் பத்திரிகையின் விற்பனையும் கூடும்!

'இப்போது இவர் என்ன சொல்கிறார்?' என்று எதிர்பார்க்கும் வாசகனின் ஆவலைத் தூண்டி அவனைப் பத்திரிகையை வாங்கச் செய்யும்!

கல்கிக்கு சர்ச்சைகள் எப்போதுமே சர்க்கரைக் கட்டி தான்! கல்கியில் வெளியான தமிழிசை இயக்கம் பற்றிய சர்ச்சைகளும், ராஜாஜியின் கல்வித்திட்டம் பற்றிய சர்ச்சைகளும் மாதிரிக்கு இரண்டு உதாரணங்கள்! இப்படி இன்னும் எத்தனையோ!

கல்கியின் சர்ச்சைகளில் ஒரு நாகரிக மணம் இருக்கும்.

பண்பட்ட அறிவாளிகளும் கலந்துகொள்ளும் அளவுக்கு அவற்றுக்கு ஒரு கௌரவமான அந்தஸ்து இருந்தது.

'கல்கி' வாயிலாக ஒரு கண்ணியமான அரசியல் வேகமே பரவியது!

### அண்ணாவை தமிழ்நாட்டு பெர்னார்ட்ஷா என்றார்

திராவிடத் தலைவர்களுடன் எதிரும் புதிருமான கருத்துக் கொண்டவர் கல்கி!

இவரை அவர்கள் எதிர்ப்பார்கள்; அவர்களை இவர் கடுமையாக விமர்சிப்பார்!

அண்ணாவின் 'ஓர் இரவு' நாடகத்தைப் பார்த்து விட்டு ''இதோ தமிழ் நாட்டில் ஒரு பெர்னார்ட் ஷா!'' என்று கூறி, தட்டிக் கொடுத்து உச்சிமேல் தூக்கி வைத்தார்.

வெறும் பத்திரிகை விற்பனைக்கான தந்திரமாகச் செய்யாமல், மனப்பூர்வமாகவே செய்தார்.

அவருடைய இந்தப் பண்பு மாற்றுக் கருத்துக் கொண்டோரையும் அவரை மதிக்க வைத்தது! இயல்பாகவே அவரது பத்திரிகை விற்பனையையும் அதிகரிக்க வைத்தது!

'குமுதம்' சின்ன விஷயங்களையும் சர்ச்சை ஆக்கியது. பத்திரிகை விற்பனையைப் பெருக்கும் ஒரு வியாபார தந்திரமாகவே இதனைச் செய்தது.

சில சமயம் சிண்டு முடிந்தும் விட்டது.

ஒரு சினிமாவில் சேர்ந்து நடித்த ஜெயலலிதாவும் சௌகார் ஜானகியும் அந்தப் பட 'டைட்டி' லில் 'என் பெயரைத்தான் முதலில் போடவேண்டும்' என்று சண்டை பிடித்தார்கள்.

அந்தச் சண்டை ஒரு சர்ச்சையாக, இருவரும் மாறி மாறி எழுதும் கட்டுரைகளாக, 'குமுத'த்தில் நான்கு வாரங்கள் வந்தது!

'குமுதம்' என்னவோ செய்து 'அடுத்த இதழ் எப்போது வரும்' என்று பார்க்க வைத்தது.

விற்பனையைப் பெருக்க என்ன வேண்டுமானாலும் தயங்காமல் செய்தது!

### மற்றப் பத்திரிகைகளைவிட விலை குறைவு

'குமுத'மும் 'தினத்தந்தி'யும் விற்பனையில் சாதனை நிலைநாட்டியதற்கு இன்னொரு காரணமும் உண்டு.

அவற்றின் விலை!

போட்டிக்கு நின்ற மற்றப் பத்திரிகைகளைவிட அவற்றின் விலை ஐந்து பைசாவாவது குறைவாக இருந்தது.

இது ஒரு சின்னக்காரணம் தான்!

ஆனால் இந்தப் பத்திரிகைகள் விற்பனையைப் பெருக்குவதற்கு எத்தனை காரணங்கள் உண்டோ அத்தனையும் கடைப்பிடித்தன என்பதற்கு இது ஒரு எடுத்துக்காட்டு!

### பார்வைக்கு இலட்சணமாக இருக்க ண்டும் VISUAL EDITING

பத்திரிகைகளின் வெற்றிக்குக் காரணமான இன்னொரு அம்சம் **visual editing** பார்வைக்கு லட்சணமாக இருக்க வேண்டும்!

பஞ்சாங்கம் மாதிரி அச்சுப் போட்டால் யாருமே வாங்க மாட்டார்கள்!

கல்கி இந்த விஷயத்தில் மிகக் கவனமாகச் செயற்பட்ட போதிலும், எஸ்.ஏ.பி. அண்ணாமலை இதற்குத் தனி முக்கியத்துவம் கொடுத்தார்.

கதைக்குப் பொருந்துகிறதோ இல்லையோ நிறைய படங்கள் வெளியிட்டார்! படங்களில் ஒருவித கவர்ச்சி இருந்தது. சில படங்களில் சுத்தமான 'செக்ஸ்' கவர்ச்சி மட்டுமே இருந்தது.

சித்திரக்காரரர்' கார்ட்டூனிஸ்ட், புகைப்படக்காரர், 'லே அவுட்' ஆர்டிஸ்ட் எல்லாரிடமும் நன்கு வேலை வாங்கினார் எஸ். ஏ. பி. அண்ணாமலை!

'தினத்தந்தி'யும் நிறைய கருத்துப் படங்கள், கவர்ச்சிப் படங்கள் எல்லாம் வெளியிட்டது. தலைப்புகள் 'பளிச்' சென்று தெரியும்படி பிரசுரித்தது. தலைப்புகள் சொன்ன செய்திகள் சுவையாக இருந்தன!

பத்திரிகாசிரியர்கள் என்னதான் முதல் தரமான விஷயங்களைப் போட்டு நிரப்பினாலும், கதை கட்டுரைகளுக்கான படங்கள் இல்லாவிட்டாலோ, 'லே அவுட்' சரியாக அமையாவிட்டாலோ பத்திரிகை எடுபடாது.

அச்சுப் பதிவு மிக மிக துல்லியமாக இருக்க வேண்டும்.

சினிமாவில் நடிப்பவர்களுக்கு 'மேக் அப்' என்னும் ஒப்பனை எவ்வளவு அவசியமோ, அதே மாதிரி பத்திரிகைகளும் இந்த 'மேக் அப்' போடத்தான் வேண்டும்!

'கல்கி', 'தினத்தந்தி', 'குமுதம்' மூன்று பத்திரிகைகளுமே இந்த விஷயத்தில் தனி அக்கறை எடுத்துச் செயற்பட்ட போதிலும், 'குமுதம்' அண்ணாமலை சற்று வித்தியாசமாகவும் புதுமையாகவும் செயற்பட்டார்!

ஒரே மாதிரி 'மேக் அப்' நெடுக எடுபடாது. ஃபாஷனுக்குத் தக்கபடி அதுவும் மாறிக்கொண்டேதான் இருக்கவே வேண்டும்!!

### காஞ்சிப் பெரியவர் என்ன சொல்கிறார்?

பத்திரிகைகளைப் பற்றிச் சொல்லும்போது காஞ்சிப் பெரிவர் கூறியிருப்பது கவனிக்கத்தக்கது.

எந்த விஷயத்தைப் பற்றியும் மிகத் தெளிவாகவும் விளக்கமாகவும் சொல்லுவது போலவே, பத்திரிகைகளைப் பற்றியும் காஞ்சிப் பெரியவர் சொல்லியிருக்கிறார்.

''ஜனங்களுக்கு விஷயத்தை மட்டுமே சொல்லுவது என்று வைத்துக் கொள்ளக் கூடாது. அவர்களின் மனசை, அறிவை உயர்த்துகிற விஷயங்களையே எழுத வேண்டும். இதைச் சுவாரசியமாகச் செய்ய வேண்டும். புதுப் புது விஷயங்களை உத்தமமான விஷயங்களைஉணர்த்த வேண்டும். பத்திரிகையாளர்கள் வாழ்நாள் முழுவதும் மாணாக்கர்களாக இருந்தால்தான் தாங்களும் இன்னும் புதுப்புது விஷயங்களை அறிந்து, மற்றவர்களுக்கும் பிரச்சாரம் செய்ய முடியும். சத்தியத்தை சர்க்கரைப் பூச்சிட்ட மாத்திரை உருவத்தில் தரவேண்டும். சர்க்கரைப் பூச்சுத்தானே ஒளிய முழுக்க சர்க்கரை ஆக்கி விடக்கூடாது. சர்க்கரை உடம்புக்கு நல்லதல்ல. வெறும் இந்திரிய ரஞ்சகமான சமாச்சாரங்களில்தான் ஜனங்களுக்கு அதிக கவர்ச்சி இருக்கிறதென்று சொல்லிக்கொண்டு இவ்விதமே எழுதுவது சரியல்ல. இருதய பூர்வமாக ஜனங்களுக்கு ஆத்மாபிவிருத்தி தருகிற முறையில் எழுதுவதற்குப் பத்திரிகைகள் முனைந்தால், தானாகவே ஜனங்களுக்கு அதில் ருசி பிறக்கும், நம்மையும் உயர்த்திக் கொண்டு நம்வாசகர்களையும் உயர்த்த வேண்டும்''

சத்தியத்தை நேசிக்கும் எவரும் காஞ்சிப் பெரியவர் கூறுவதற்கு மறுப்புச் சொல்ல முடியாது!

அவர் சொல்லும் வார்த்தைகளைக் கொண்டு அளக்கும்போது 'தினத்தந்தி' ஆதித்தனை விடவும், 'குமுதம்' எஸ்.ஏ.பி அண்ணாமலையை விடவும் 'கல்கி' ரா. கிருஷ்ணமூர்த்தி எவ்வளவோ உயர்ந்து நிற்பது தெரிகிறது!

## தொல்புரத்தில் மகா சிவராத்திரி

தொல்புரம் ''கொட்டடி யம்பதி'' அருள் மிகு ஸ்ரீ ஆதி முத்துமாரி அம்மன் ஆலயத்தில் எதிர்வரும் 25 ந் திகதி சிவராத்திரி விழா மாலை 6 மணிக்கு ஆரம்பமாகி அபிஷேக ஆராதனைகளும் வழமைபோல் நான்கு ஜாமப் பூஜை மற்றும் பிரார்த்தனைகளும் இடம் பெற்று விசேட நிகழ்ச்சிகளாக ''பக்திரசகீதங்கள்'' இசைக்கப்பட்டு மறுநாள் காலை ''வசந்தன் கம்பு'' கோலாட்டம் ஆடப் பெற்று நித்திரைவிழிப்பும் நடைபெறுமென தேவஸ்தான பரிபாலன சபை செயலாளர் க. வேலாகேஸ்வரன் தெரிவிக்கின்றார்.

## உதவிக்கல்விப் பணிப்பாளர் ஓய்வு பெறுகிறார்

யாழ்ப்பாணம் கல்வி வலயம் ஒன்றில் அடங்கும் யாழ்ப்பாணம்' நல்லூர் மற்றும் தீவகக்கோட்டங்களுக்கு பொறுப்பாக விருந்த . வ .தானையா அவர்கள் இம்மாதம் தொடக்கம் உதவிக்கல்விப் பணிப்பாளர் பதவியினின்றும் ஓய்வுபெறுகிறார்.

## இராமச்சந்திரன் புதிய உதவி அரசாங்க அதிபர்

நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபராக கு. இராமச்சந்திரன் அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார். நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபராக நியமிக்கப்பட்டிருந்த எஸ். பி. அருளப்பு அவர்கள் மீண்டும் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தராக நெடுந்தீவிற்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

(சி-1)

தீவகத்தில்

## ஆங்கில பாடம் கற்பிக்க ஆசிரியர்கள் பின்னடிப்பு

தீவகப் பாடசாலைகளில் ஆங்கில பாடத்தைக் கற்பிக்கச்செல்லஆங்கிலஆசிரியர்கள் பின்னடிப்பதில் தீவக மாணவர்கள் ஆங்கில பாடம் கற்க மார்க்கமின்றி மிகவும் அவதிப்படுகிறார்கள். யாழ்ப்பாண கல்வி வலயம் ஒன்றின் பணிப்பாளர் சு. இரத்தினராசா அவர்கள் தீவகப் பாடசாலைகளுக்கு நியமிக்கும் பகுதிநேர ஆங்கில ஆசிரியர்கள் போக்குவரத்து, உணவு, மற்றும் அசௌகரியங்களைக் காரணங்காட்டி தீவகம் சென்று ஆங்கிலம் கற்பிக்க தயக்கம் காட்டி வருகின்றனர். ஆங்கிலபாடத்தில் குறைந்த பட்சம் திறமைச் சித்தியினைப் பெற்றுள்ளவர்கள் கல்வித்திணைக்களத்தினால் நடாத்தப்படும் ஆங்கில பாட சம்பந்தமான பரீட்சையில் சித்தியடையின் பாடசாலைகளில் ஆங்கில பாடத்தைக் கற்பிக்கும் பகுதி நேர ஆங்கில ஆசிரியர்களாக நியமிக்கப்பட்டு வருவது தெரிந்ததே. கடந்த காலங்களில் போர் அனர்த்தங்களினால் கல்வியில் முன்னின்ற தீவக மூளைசாலிகள் இடம் பெயர்ந்து வெற்றிடங்களுக்குச் சென்றமையினால் ஆங்கில பாடத்தைக் கற்பிக்க தீவகத்தில் ஆட்களை வலை வீசிப் பிடிக்க வேண்டியுள்ளது. ஆங்கிலத்தில் திறமைச் சித்தியடைந்தோர் மாணவர்களின் எதிர்காலத்தை முன்னிட்டு ஆங்கிலம் கற்பிக்க முன்வருமாறு கல்விப் பணிப்பாளர் அவர்கள் அறைகூவல் விடுக்கின்றார்.

## போதிய ஊழியர்கள் இன்றி வங்கிகள் திண்டாட்டம்

யாழ்ப்பாணத்திலுள்ள மக்கள் வங்கி, இலங்கை வங்கி, தேசிய சேமிப்பு வங்கிகள் மற்றும் வர்த்தக,ஹற்றன் தேசிய வங்கிகளில் கடமையாற்ற போதிய ஊழியர்கள் இன்மையால் வங்கிகளின் நாளாந்த அலுவல்கள் பெருஞ் சிரமத்தின் மத்தியிலேயே நடைபெற்று வருகின்றன. இதனால் மக்கள் தமது தேவைகளை நிறைவேற்ற நீண்ட நேரம் செலவிட வேண்டியுள்ளது.

வங்கிகளில் நிலவும் ஊழியர்கள் பற்றாக்குறை பற்றி முகாமையாளர்கள் பலதடவைகள் தலைமைப் பீடங்களை வற்புறுத்தியும், அவை யாவும் செவிடன் காதில் ஊதிய சங்காயிற்று. பிற மாவட்டங்களிலுள்ள வங்கிகளில் தேவைக்கதிகமாக ஊழியர்கள் கடமை புரிவது குறிப்பிடத்தக்க விசனித்தக்கதோர் அம்சம் என கருத்தரங்குகளுக்கு சென்று வரும் யாழ் மாவட்ட வங்கிகளின் முகாமையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

வங்கிகளில் நிலவும் ஊழியர்கள் பற்றாக் குறையை ஓரளவேனும் நிவர்த்தி செய்யுமுகமாக பல்கலைக்கழகங்களுக்கு தெரிவு செய்யப்படும் மாணவர்களில் அதிகூடிய புள்ளிகள் பெறுபவர்களை வங்கிகளில் கடமை புரிய தெரிவு செய்து கடமை புரிய விடப் பட்ட போதிலும் பல்கலைக்கழக கல்வியாண்டு தொடங்கியதும் அவர்கள் கற்கச் சென்று வருவதனால் அவர்களின் சேவைகள் குறுகிய காலப் பொழுதில் மட்டுமே வங்கிகளுக்கு கிடைக்கின்றன.

யாழ் மாவட்டத்தில் நிலவும் வங்கி ஊழியர் பற்றாக் குறையைப் போக்க வெகு விரைவில் இங்கு பரீட்சை ஒன்றை நடாத்தி தேவையான ஊழியர்களைத் தெரிவு செய்வதென வங்கிகளின் தலைமைப் பீடம் தீர்மானித்துள்ளதென அறியவருகின்றது. இருந்தும் இவை பற்றி மேலதிக தகவல்கள் எதுவும் கிட்டாத நிலையில் ''பழைய குருடி கதவைத்திறவடி'' என்ற நிலையில் வேலைப்பழுவினால் தள்ளாடிக் கொண்டே வங்கிகள் இயங்கிவருகின்றன.

(சி-1)

## முல்லைத்தீவில் 42 ஆசிரியருக்கு நிரந்தரநியமனம்

முல்லைத்தீவு மாவட்டத்தில் நிலவிய ஆசிரியர் பற்றாக் குறையை நிறைவேற்றும் பொருட்டு42 ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட்டு அனுப்பிவைக்கப் பட்டுள்ளார்கள்.

இவர்களில் பெரும்பாலானோர் ஆரம்பக்கல்வி ஆசிரியர்களாவார்கள். இவர்களுக்கான பயிற்சிக்கருத்தரங்குகள் நடைபெற்று வருகின்றன.

## தமிழ் மொழித்திறன் வகுப்புக்கள்

வேலணை சேர் வைத்தியலிங்கம் துரைசுவாமி மத்திய மகாவித்தியாலயத்தில் மாணவர்களின் தமிழ் மொழித் திறனை வளர்த்தெடுக்கும் நோக்கமாகவும், இழந்து போன கல்வியை ஈடு செய்யுமுகமாகவும் மேற்படி பாடசாலையின் பழைய மாணவர் சங்கத்தினரின் அனுசரணையுடன் தமிழ் மொழித்திறன் விருத்திக்கென ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளமை பிற பாடசாலைகளுக்கும் ஓர் முன்னுதாரணம் என்கிறார் மேற்படி பாடசாலையின் அதிபர் கு. கணேசலிங்கம் அவர்கள்.

(சி-1)

## கற்கைநெறி மார்ச் 7 இல் ஆரம்பம்

பட்டப்பின் கல்வி டிப்ளோமா பட்டதாரி ஆசிரியர்களுக்கு யாழ் இந்துக் கல்லூரியில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் தேசிய கல்வி நிறுவகத்தின் 96 - 97 ல் கல்வியாண்டு மாணவர் களுக்குரிய கற்கை நெறி மார்ச் மாதம் 7 ந் திகதி ஆரம்பிக்கின்றதென சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி தனலெட்சுமி வில்வநாதன் சம்பந்தப்பட்ட ஆசிரிய மாணவர்க்கு தெரியப்படுத்துகிறார்.

## மாவட்ட மட்ட சுதந்திரப் பொன் விழா

இலங்கை சுதந்திரம் பெற்ற 50 வது அகவையினை நினைவு கூருமுகமாக கொண்டாடப்பட்டு வருகின்ற சுதந்திர பொன் விழா நிகழ்ச்சியானது ''மாவட்ட மட்டத்தில்'' எதிர்வரும் 28 ல் யாழ்/ இந்து மகளிர் கல்லூரியில் வெகு கோலாகலமாக கொண்டாடப்படவிருக்கும் இவ்விழாவில் பாடசாலை மாணவர்களின் கலை வடிவங்கள், காண்பிக்கப் படுவதுடன் முக்கிய பிரமுகர்களின் உரைகளும் இடம் பெறும்.

## கோயம் புத்தூரில்
# மீண்டும் குண்டு வெடிப்பு நான்கு மாணவர்கள் பலி

கோயம்புத்தூரில் நேற்றும் குண்டுவெடிப்பு நிகழ்ந்துள்ளது. இச்சம்பவத்தில் நான்கு பாடசாலை மாணவர்கள் பலியாகியுள்ளனர்.

பாடசாலை மைதானத்தில் விளையாடிக் கொண்டிருந்த சிறுவர்கள் ''பொலித்தீன் பை'' க்குள் இருந்த பெட்டி ஒன்றைக் கண்டு அதனைத் திறக்க முயன்றனர். இதன் போது அதற்குள் இருந்த குண்டு வெடித்தே இந்நான்கு சிறுவர்களும் பரிதாபமாகப் பலியானார்கள்.

இதேவேளை கோயம்புத்தூரில் நிகழ்ந்துள்ள குண்டு வெடிப்பு சம்பவங்கள் பற்றி விசாரணைகளை மேற்கொள்ள ''கமிஷன்'' ஒன்று நிறுவப்பட வேண்டும் என பாரதீய ஜனதாக்கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

## எம்பிலப்பிட்டிய
# மாணவர் படுகொலை 20 வருட சிறைத் தண்டனை

எம்பிலப்பிட்டிய மாணவர் படுகொலை வழக்கில் குற்றவாளிகளாகக் காணப்பட்டவர்களுக்கு இருபது வருட சிறைத் தண்டனையும், குற்றப் பணமும் தண்டனையாக விதிக்க முடியும்.

இவ்வாறு ஜனாதிபதி சட்டத்தரணி டி,பி. குமாரசிங்க தெரிவித்துள்ளார்.

இரத்தினபுரி மாவட்ட உயர் நீதிமன்றத்தில் நேற்று நடந்த விசாரணையின் போது ஒன்பது சந்தேக நபர்களுக்கெதிராக எண்பது குற்றச் சாட்டுகள் சுமத்தப் பட்டிருந்தன.

ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிக் காலத்தில் எம்பிலப்பிட்டிய மத்திய மகாவித்தியாலயத்தை சேர்ந்த இருபத்தைந்து மாணவர்கள் கடத்தப் பட்டு படுகொலை செய்யப்பட்டது தெரிந்ததே.

# கருணாநிதியின் வாகனத்திற்கு கல் வீச்சு

தமிழகமுதல்வர் மு.கருணாநிதி சென்ற வாகனம் மீது கல்வீச்சு இடம்பெற்றது. விழுப்புரம் மாவட்டத்தில் நேற்று முன்தினம் மாலை, முதல்வர் இரண்டாம் கட்ட தேர்தல் பிரச்சாரத்திற்காக சென்றபோதே ஒரு குறிப்பிட்ட கட்சித்தொண்டர்கள் அவரது வாகனம் மீது கல் வீசினர் எனத் தெரியவருகின்றது.

# க.பொ.த.(உ.த) பரீட்சையின் சில பாடசாலை முடிவுகள்

### யாழ். இந்துக் கல்லூரி

**கணிதம்**

| | |
|---|---|
| எஸ். உதயசங்கர் | 4 ஏ |
| எஸ். சிறிஸ்காந்தவேல் | 4 ஏ |
| ஏ. ஐங்கரன் | 4 ஏ |
| எஸ். செந்தூரன் | 4 ஏ |
| எஸ். பிரகலாதன் | 3ஏ பி |
| ரி. சுதாதகர் | 3ஏ பி |
| எஸ். விஜயகுமார் | 2 ஏ2பி |
| கே. விதாகரன் | 2ஏ2பி |
| ஏ. திசங்கன் | 2ஏ2பி |
| எஸ் ஐங்கரன் | 2ஏ2பி |
| எஸ். செந்திரன் | 2ஏ,பி,சி |
| சி. ஜெயகுமாரன் | ஏ 3பி |
| கு. சிவகரன் | ஏ 3பி |
| சு. துவாரகன் | ஏ 3பி |
| ந. சுதர்சன் | 4 பி |
| எஸ். சிவசோதி | 4 பி |
| அ. அருள்ராசா | ஏ, 2பி சி |
| ஜெ. யதுநந்தனன் | ஏ 2பி சி |
| சி. தயாளன் | ஏ 2பி சி |
| தி ஸ்கந்தகுமார் | ஏ 2பி சி |
| ப. கஜன் | ஏ 2பி சி |
| என். நவரூபன் | ஏ 2பி சி |

**உயிரியல்**

| | |
|---|---|
| ரி.சுகிதரன் | 4 ஏ |
| ஏ. பிரதீபன் | 3ஏ பி |
| வை. சிவாகரன் | 2ஏ 2பி |
| எஸ். கணேஸ்குமார் | 2ஏ 2பி |
| வி. பவந்தன் | ஏ 3பி |
| பி. செந்தூரன் | ஏ 2பி சி |
| எஸ். சசிகரன் | ஏ 2பி சி |
| எம். தயாகரன் | ஏ 2பி சி |
| எம். அறிவழகன் | ஏ பி 2சி |
| எஸ். சுதர்சன் | ஏ பி 2சி |
| வி. சுசாந்த் | 3பி சி |
| ஆா. விசாகரூபன் | 3பி சி |
| எஸ். சிறீகரன் | 3பி சி |

**வர்த்தகம்**

| | |
|---|---|
| எஸ். ரவிதாஸ் | 4 ஏ |
| என். கெங்காதரன் | 3ஏ 1பி |
| கே. தினேஸ்குமார் | 2ஏ 2பி |
| ஆர். றவீவன் | 2ஏ பி சி |
| எஸ். ஜனார்த்தனன் | ஏ 2பி சி |
| ஏ. கேதீஸ்வரன் | ஏ 2பி சி |

**கலை**

| | |
|---|---|
| எஸ். நவனீதகிருஷ்ணன் | 2ஏ 2பி |
| ஆர். அஜந்தா | 2ஏ பி சி |
| என். ஊசிக்குமார் | 1ஏ 2பி 1சி |
| ரி. செல்வமனோகரன் | 1ஏ 2பி 1சி |

### வேம்படி மகளிர் கல்லூரி

**கலை**

| | |
|---|---|
| யோ. வானதி | - 3ஏ, பி. |
| செ. நிதாயினி | - 3ஏ,பி |

**உ. விஞ்ஞானம்**

| | |
|---|---|
| எஸ். பிரமிளா | - 3ஏ,பி |
| ஆர். செந்திரு | - 3ஏ,பி |
| ரி. ஜெயந்தி | - 3ஏ,பி |
| ரி. தர்மிளா | - 3ஏ'பி. |

**வர்த்தகம்**

| | |
|---|---|
| எஸ். வாசுகி | - 3ஏ,சீ |
| எஸ். சர்மிலி | - 2ஏ,2பி |
| என். சங்கீதா | - 2ஏ,2பி |
| எஸ். குகனேஸ்வரி | - ஏ,3பி |
| கே. பிரதிா | - ஏ,2பி,சி |

### யாழ். மத்திய கல்லூரி

**வர்த்தகம்**

| | |
|---|---|
| சி. கஜேந்திரன் | - 4ஏ, |
| சா. தயாளன் | - 4ஏ; |
| ம. காண்டீபன் | - 4ஏ; |
| தி. நடனசபேசன் | - 4ஏ. |
| ஜெ. பிரதாபன் | - 2ஏ,பி சீ. |

**உயிரியல் விஞ்ஞானம்**

| | |
|---|---|
| வி. நிஷாந்தன் | - 3பி,சீ. |

**கணிதம்**

| | |
|---|---|
| ந. பிரியதீபன் | - ஏ,3பி |

### யாழ். கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம்

**வர்த்தகம்**

| | |
|---|---|
| சி. விஜிதா | - 2ஏ,2பி |
| ப. இந்திரகுமார் | - 2ஏ,பி,சீ |
| சா. சயந்தன் | - ஏ,3பி |
| எஸ். பிரசன்னா | - ஏ,3பி |
| எஸ். ஹரிதாஸ் | - ஏ,2பி,சீ |
| ந. சிவானந்தராஜா | - ஏ,2பி,சீ |
| வீ. தயாபரன் | - ஏ,2பி,சீ |
| ரி. நிரஞ்சனி | - ஏ,2பி,சீ |

**கலை**

| | |
|---|---|
| கு. ராஜிகா | - ஏ,பி,2சீ |
| இ. கஜேந்தினி | - ஏ,பி,2சீ |
| ந. லஜிதா | - ஏ,பி,சீ,எஸ் |

**விஞ்ஞானம்**

| | |
|---|---|
| ஒருவர் | - பி,3சீ |

# 1997ல் யாழ் மாவட்டத்தில் சிசு மரணம் அதிகரிப்பு

யாழ் மாவட்டத்தில்1997ம் ஆண்டில் 5ஆயிரத்து தொளாயிரத்துஇருபத்திநான்கு குழந்தைகள் பிறந்து இருப்பதாக யாழ் மாவட்ட புள்ளி விபரங்கள்தெரிவிக்கின்றன.

இவ்வாறு பிறந்தகுழந்தைகளில் சுமார் பத்து சதவிதமான குழந்தைகள் நிறை குறைந்த பிள்ளைகள்என்றும் கருவுள்ள தாய்மார்களின் நூற்றி நாற்பத்தி எட்டு பேருக்கு பிண்டச்சிதைவும் இருநூற்றி ஐந்து தாய்மாருக்கு கருச்சிதைவும் ஏற்பட்டிருப்பதாக அப்புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன்.

இதே வேளை பிரசவத்தின் போது பதின்நான்கு தாய்மார் மரணம் அடைந்துள்ளதாகவும் இருநூற்றி எட்டு சேய்கள் மரணம் அடைந்துள்ளதாகவும் மரணங்களுக்கான முக்கிய காரணம் உரிய முறையில் சிகிச்சை மற்றும் வைத்திய வசதிகளை பெற்று கொள்ளாமை என அப்புள்ளி விபர அறிக்கையில் சுட்டிக் காட்டப் பட்டுள்ளது.

# மருந்தகவியலாளர் பதவி விண்ணப்பங்கள் கோரல்

தனியார் துறை மருந்து விற்பனை நிலையங்களில் ஏற்பட்டுள்ள மருந்தகவியலாளர்களின் பற்றாக்குறையை நீக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இதற்காக ஆயிரம் பேரை மருந்தகவியலாளராகப் பயிற்றுவிக்க சுகாதார, சுதேசிய மருத்துவ அமைச்சு முடிவு செய்துள்ளது.

இப்பயிற்சி நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

க. பொ. த சாதாரண உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்த 18 வயதிற்கும் 30 வயதிற்கும் இடைப்பட்ட ஆண், பெண் இருபாலாரும் இப் பயிற்சி நெறிக்கு விண்ணப்பிக்க முடியும்.

இரண்டு வருடங்கள் கொண்ட இப்பயிற்சி நெறி ஆங்கில மொழியில் மட்டுமே நடத்தப்படும்.

# புதிய முறை வாழை உற்பத்தி நல்ல பலன் விரைவாகப் பெற!

கிழங்கு மூலமாகவும் விதைகள் மூலமாகவும் வாழை உற்பத்தி செய்ய முடியும்.

தற்போது சந்தையில் வாழைக்கு நல்ல கிராக்கி ஏற்பட்டுள்ளது.

கப்பல், கதலி, சீனிவாழை, ஆனை வாழை மற்றும் வாழைக்காய் ஆகியவற்றுக்கு நல்லகிராக்கி ஏற்பட்டுள்ளது.

இவைகளை உற்பத்தி செய்வதில் விவசாயிகளுக்கு பல சிரமங்கள் ஏற்பட்டுள்ளன.

பலபேர் வாழை குட்டி நடுவதில் ஆர்வம் காட்டி வருகிறார்கள்.

ஆனால் ''ரிசு கல்ச்சர்'' என்று அழைக்கப்படும் வாழைக் கிழங்கில் ஒரு துண்டால் உற்பத்தி செய்யும் ஒரு முறையையும் மற்றும் வாழை விதையில் மரத்தை உற்பத்தி செய்யும் முறையையும் தற்போது கமநல திணைக்களத்தினர் அறிமுகப்படுத்தி வருகிறார்கள்.

இவற்றுள் 'ரிசு கல்ச்சர்' முறையில் ஒரு வாழைக் கிழங்குத் துண்டை எடுத்து ஒரு போத்தலில் போட்டு அந்தப் போத்தலை 'கிறீன் ஹவுஸ் என்று சொல்லப்படும் இடத்தில் வைத்து வளர்க்கப்படுகிறது.

வளர்ந்து வந்தபின் அதனை எடுத்து நிலத்தில் நாட்டுவது நல்ல பயன் தருவதாக இருக்கிறது.

இந்த முறை ''சீட் கல்ச்சர்'' என்று சொல்லப்படும் முறையை விட இலகுவாக உள்ளது என்று கமநல திணைக்களம் அறிவித்து உள்ளது.


விளம்பரம் செய்ய

"சூரியகாந்தி"

68/1 ராசாவின் தோட்டம் வீதி,
யாழ்ப்பாணம்.

விளம்பரதாரர்கள்:

யாழ்நகரில் அமைந்துள்ள

பரணன் அசோசியேட்ஸ்

81, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
என்ற முகவரியிலும் விளம்பரங்களை கையளிக்கலாம்.


# நூலக உதவியாளர்களுக்கு பதவி உயர்வு கிடைக்கவில்லை

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்தில் நீண்டகாலமாக நூலக உதவியாளர்களாகப் பணியாற்றிவரும் நூலக உத்தியோகத்தர்களுக்கு இதுவரை எதுவித பதவி உயர்வுகளும் வழங்கப்படவில்லை.

இவர்களில் பலர் நூலகவியல் தகவல் விஞ்ஞானம் இடைநிலைப பரீட்சையிலும் ஏனையோர் முதல் நிலைப் பரீட்சையிலும்சித்தியடைந்தவர்கள்.

இவர்களுள் 15 வருட சேவையைப் பூர்த்தி செய்தவர்களும் அடங்குவர். இந் நூலக உதவியாளர்கள் அனைவரும் சிற்றூழியர்களின் சம்பளத்தையே பெற்றுவருகின்றனர். பொதுவாக நூலக உதவியாளர்களாகப் பணியாற்றி 5 வருடம் சேவையைப் பூர்த்திசெய்தவர்கள் தரம் 3 நூலகர்களாகப் பதவி உயர்த்தப்படுவது வழக்கம்.

ஆனால் வடகிழக்கில் பணியாற்றும் நூலக உதவியாளர்கள் தொடர்ந்தும் சிற்றூழியர்களின் சம்பளத்தையே பெற்றுவருகின்றனர். எதுவித பதவி உயர்வுகளும் இதுவரை இவர்களுக்குக் கிடைக்கவில்லை.

இது சம்பந்தமாக இவர்கள் வடகிழக்கு மாகாணசபை, மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள், ஜனாதிபதி ஆகியோருடன் தொடர்புகொண்டும் இதுவரை எதுவித ஆக்கபூர்வமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

அரசாங்கம் தற்காலிக நூலகம் திறப்பதில் காட்டிய அக்கறையையும் அவசரத்தையும் போல தமது பதவி உயர்வைப்பற்றியும் கொஞ்சமாவது கவனத்தில் எடுக்குமா என நூலக உதவியாளர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

# சரித்திரத்தில் உங்கள் பெயர்

பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அநுருத்த ரத்வத்த மாங்குளத்திற்கு விஜயம் செய்தார். அங்கு அவர் இராணுவ வீரர்கள் மத்தியில் உரையாற்றுகையில் உங்களது பெயர்கள் சரித்திர வீரர்கள் பட்டியலில் இடம் பெறும் எனக் கூறினார்.

# வேவு பார்த்ததாக நான்கு பேர்கைது

வேவு பார்க்கச் சென்ற விடுதலைப் புலிகள் அமைப்பைச் சேர்ந்த நான்கு பேர் கிழக்கு மாகாணத்தில் கைது செய்யப் பட்டுள்ளார்கள்.

பாதுகாப்பு உயர் அதிகாரிகளின் போக்குவரத்தை உளவு பார்க்கச் சென்ற இவர்கள் மட்டக்களப்பு நகருக்குள் ஊடுருவிய பொழுது விசேட பொலிஸ் பிரிவினரால் கைது செய்யப் பட்டுள்ளார்கள்.

இவர்களில்இருவர் விடுதலைப் புலிகள் அமைப்பைச் சேர்ந்தவர்கள் என்று ஒப்புக் கொண்டுள்ளார்கள் என்று நடவடிக்கை தலைமை அலுவலகம் செய்தி வெளியிட்டுள்ளது.

# செல்போன் முகவர் கைது

தலதா மாளிகைக் குண்டு வெடிப்புத் தொடர்பாக செல்போன் விற்பனையாளர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார், இவர் தலதா மாளிகைக் குண்டு வெடிப்புச் சந்தேக நபர் ஒருவருக்கு செல்போனை விற்பனை செய்தார் என்ற குற்றச்சாட்டிலேயே இவர் கைது செய்யப்பட்டுள்ளார்,

# கூடைப்பந்தாட்ட பயிற்சி

எதிர்வரும் 23ம் திகதி முதல் மத்திய கல்லூரி மைதானத்தில் கூடைபந்தாட்டம் பயிற்சிகள் ஆரம்பமாகின்றன.

### சாவகச்சேரியில்

# கட்சிகள் மீது சமகாலத்தில் குண்டுவீச்சு துப்பாக்கிப்பிரயோகம்

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரிப் பகுதியில் இரண்டுகட்சி அலுவலகம்மீது நேற்று முன்தினமிரவு சமகாலத்தில் கைக்குண்டு வீசப்பட்டுள்ளது, இக்கைக்குண்டு விச்சை அடுத்து இரவு முழுவதும் சரமாரியான துப்பாக்கிப் பிரயோகம் நடைபெற்ற வண்ணம் இருந்தது.

சாவகச்சேரி பிரதேச செயலகத்திற்கு மிக நெருக்கமாக இயங்கும் மேற்படி கட்சி அலுவலகங்கள்மீது இக்கைக்குண்டு தாக்குதல் நடைபெற்றது. இக்குண்டுத் தாக்குதலைத் தொடர்ந்து கட்சிகளின் இரண்டு உறுப்பினர் காயம் அடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இக்குண்டுத் தாக்குதல், துப்பாக்கிப் பிரயோகம் என்பவற்றைத் தொடர்ந்து சாவகச்சேரி நகரை அண்டியபகுதி வாழ் மக்கள் பயப்பீதியுடன் இரவைக் கழித்தனர் என அச்செய்திகள் மேலும் தெரிவிக்கின்றன.

# தப்பியோடிய சிப்பாய் எனநினைத்து தாக்குதல்

கடந்த வியாழக் கிழமை நாவலப்பிட்டி புகையிரத நிலையத்தில் மேசன் ஒருவர் புகையிரத பாதுகாப்பு ஊழியர்கள் மூவரால் மோசமாகத் தாக்கப்பட்டுள்ளார்,

வியாங்கொடையைச் சேர்ந்தஇவர் சிவனொளி பாதத்தில் தனது வேலையை முடித்து விட்டுத் திரும்பிக் கொண்டிருக்கும் போதே இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது,

இவர் இராணுவத்திலிருந்து தப்பி யோடியவர் என நினைத்தே இவர்மீது தாக்குதல் நடத்தப் பட்டுள்ளது புகையிரதநிலையஅதிபர் இவரைமருத்துவமனைக்குச்சென்றுசிகிச்சை பெற்றுக் கொள்ளுமாறு கூறியனுப்பியுள்ளார்.

சுமதிபால என்றஇந்த நபர் வைத்தியசாலைக்குச் செல்ல முன்னர் பொலிஸில் முறைப்பாடு செய்யச்சென்ற போது அங்கிருந்த பொலிஸ்காரர் வெளியே போ எனக் கூறி இவர் மீது தயவு தாட்சணியமின்றித் தாக்குதல் நடத்தியுள்ளார் இந்நபர் தற்போது மருத்துவ மனையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

# கிளிநொச்சி போர் நிலவரம் வெரித்தாஸ் தரும் செய்தி

கிளிநொச்சி நகரின் பெரும் பகுதி விடுதலைப்புலிகள் வசம் இருப்பதனை இராணுவ அதிகாரிகள் இரகசியமாக ஒத்துக் கொண்டுள்ளார்கள் என செய்திகள் தெரிவித்தன

நகரில் உள்ள முன்னரங்க காவல் அரண்களில் நான்கு கி. மீ வரையானவை புலிகள் வசமே உள்ளதாக இராணுவ அதிகாரிகள் இரகசியமாக ஒத்துக் கொண்டுள்ளனர்.

கிளிநொச்சி நகரில் இராணுவத்தினரின் நிலைகளுக்கும் புலிகளின் நிலைகளுக்கு இடையில் சுமார் ஒரு கி. மீ வரையான இடைவெளியே உள்ளது என அங்கு சென்று வந்த செய்தியாளர்கள் தெரிவித்துள்ளனர் என வெரித்தாஸ் வானொலி தெரிவித்துள்ளது.

இதேவேளை வன்னிப்பகுதியில் நடைபெற்றுவரும் 'ஜெயசிக்குறு இராணுவநடவடிக்கையினை எதிர்த்து விடுதலைப்புலிகள் தாக்குதல்களை மிகவும் உறுதியுடனும்' ஆக்ரோஷத்துடனும் நடத்துவதாக இராணுவ அதிகாரிகள் ஒத்துக் கொண்டதுடன் வன்னி மண்ணின் புவியியல் அமைவு இராணுவத்தினருக்கு பெரும் எதிரியாக இருப்பதாகவும் அவ்வதிகாரிகள் தெரிவித்துள்ளதாக அவ்வானொலி மேலுந்தெரிவித்துள்ளது.

# படை கெடுபிடியால் தமிழ் இளைஞர் தற்கொலை

வவுனியா தமிழ் மகாவித்தியாலய இடம் பெயர்ந்தோர் முகாமில் இளைஞர் ஒருவர் தற்கொலை செய்துள்ளார்,

சென்ற பதின்மூன்றாம் திகதி இவர் நஞ்சருந்தி தற்கொலை செய்துள்ளார், கடந்த ஒருவருடகாலமாக இம் முகாமில் தங்கி இருந்த இவர் படையினர் வழங்கும் நான்கு மணித்தியால ''பாஸ்'' இல் வெளியே சென்று தையல் வேலை செய்து தன் தாயாரையும் காப்பாற்றி தானும் வாழ்ந்து வந்தார், திடீர் என படையினர் நான்கு மணித்தியால 'பாஸை' நிறுத்தியதால் இவர் வேலை செய்ய முடியாது போனது. இதனால் மனமுடைந்த இவ்விளைஞன் தற்கொலை செய்து கொண்டார் எனத் தெரிய வருகின்றது.

## சல்பருக்கு தடை

(யாழ்ப்பாணம்)

'சல்பர்' கிருமி நாசினிக்கு பாதுகாப்பு அமைச்சினால் திடீர் தடை விதிக்கப்பட்டுள்ளதாக கொழும்பில் இருந்து கிடைத்த தகவல் தெரிவிக்கின்றது. யாழ். கமத்தொழில் திணைக்களம் 'சல்பர்' கிருமி நாசினியை யாழ்ப்பாணம் எடுத்து வருவதற்கு இரண்டு தடவை விண்ணப்பித்த போதும் அவ்விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டுள்ளது.

# இந்திய ஜனாதிபதிக்கு வாஜ்பாஜ் பாராட்டு

இந்தியக் குடியரசுத் தலைவர் கே,ஆர் நாராயணன் மக்களவைத் தேர்தலில் வாக்களித்ததற்கு பாரதிய ஜனதாக்கட்சித் தலைவர் அடல் பிஹாரி வாஜ்பாஜ் பாராட்டுத் தெரிவித்துள்ளார்,

குடியரசுத் தலைவரின் இச்செயல் இந்திய ஜனநாயகத்தை மேலும் வலுப்படுத்துவதோடு ஜனநாயகத்தில் மக்களின் பொறுப்புணர்வை இது எடுத்துக் காட்டுவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்,

இந்திய வரலாற்றில் மக்களவைத்தேர்தலில் ஜனாதிபதி ஒருவர் வாக்களித்தது இதுவே முதற்தடவையாகும்,

# சகல மக்களினதும் நலனுக்காக பாடுபட்டவர் விஜேயகுமாரதுங்க

இலங்கை இனப்பிரச்சனை சமாதானமுறையில் தீர்க்கப்படவேண்டும் என்பதில் உறுதியாக இருந்தவர் அமரர் விஜயகுமாரதுங்க.

அவர் சகல மக்களினதும் நலனுக்காக தனது உயிரை துச்சமாக மதித்துச் செயலாற்றினார் இவ்வாறு நேற்று முன்தினம் கட்டுநாயக்காவில் நடந்த அமரர் விஜயகுமாரதுங்காவின்பத்தாவது நினைவு தினக்கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய ஜனாதிபதிசந்திரிக்கா குமாரதுங்க தெரிவித்தார்'

இந்நாட்டு மக்களுக்குத் தனது கருத்துக்களை சுதந்திரமாகத் தெரிவிப்பதற்குக் கூட சந்தர்ப்பம் வழங்கப்படாத மிகவும் கொடூரமான காலகட்டத்திலேயே அமரர் விஜயகுமாரதுங்க சமூக நீதிக்காகப் போராடினார் எனவும் குறிப்பிட்ட ஜனாதிபதி அவரின் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றும் வகையில் நீதியும், நியாயமும், உடைய சமுதாயத்தை உருவாக்கும் கடமை தனக்கு உண்டு எனவும் தெரிவித்தார்.

இதற்குமுன்னதாக ஜனாதிபதி தனது இருபிள்ளைகளுடனும் சென்று கட்டுநாயக்காவிலுள்ள குமாரதுங்காவின் உருவச் சிலைக்கு மலர் மாலை அணிவித்தார்'

# க.பொ.த.உயர் வகுப்பிற்கு மாணவிகளும் அனுமதி

2000ம் ஆண்டில் நடைபெறவிருக்கும் க. பொ. த, உயர்தர வகுப்புக்கு யாழ், மத்திய கல்லூரிக்கு விண்ணப்பித்த மாணவர்களுக்கு அனுமதிகள் வழங்கப்படுகின்றன,

1978ம் ஆண்டிற்கு முன்பு இருந்ததுபோல் மாணவர் மட்டுமன்றி மாணவிகளும் இம்முறை அனுமதிக்கப்படுகின்றனர்,

அத்துடன் க. பொ. த. (சாதாரண) வகுப்பு 2ம் வருட மாணவர்களுக்கும் வகுப்புக்கள் நடைபெறுகின்றன கலை, வர்த்தகம் ,விஞ்ஞானம் ஆகிய 3 பிரிவுகளுக்கும் மாணவர் அனுமதிக்கப்படுவர்,

# சர்வதேசப்பாடசாலை பதிவு இனிமேல் இல்லை

இனிமேல் புதிதாக சர்வதேசப் பாடசாலைகள் எதையும் பதிவு செய்வதில்லையென அரசாங்கம் தீர்மானித்துள்ளது. தேசிய கல்விக் குழு ஜனாதிபதியின் அனுசரணையுடன் இத்தீர்மானத்தை நிறைவேற்றியுள்ளது.

தற்போது இயங்கிவரும் சர்வதேசப் பாடசாலைகள் கம்பனிகள் வர்த்தக சட்டங்களின் கீழேயே பதிவு செய்யப்பட்டுள்ளன. இந்த சர்வதேசப் பாடசாலைகள் பெரிதும் இலாபத்தையே நோக்கமாகக் கொண்டு செயற்பட்டு வருகின்றன.

சர்வதேசப் பாடசாலைகள் சர்வதேசப் பரீட்சைகளுக்கு ஏற்ற வகையில் ஆங்கில மொழியில் கல்வி புகட்டி வருவது மாணவர்களுக்கும் நாட்டுக்கும் பெரும் தீங்கானது என குழு தெரிவித்துள்ளது.

இப்பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்கள் இந்நாட்டின் வரலாறு, கலாசாரம், மொழி என்பவற்றை பற்றி அறிந்து கொள்ளாமலிருப்பதாகவும் தேசிய கல்விக் குழு வெளியிட்டுள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளது.

## அந்தஸ்து...

கின்றனர்.

தற்போது மேற்படி கட்சிகள் அனுபவம் நிறைந்தவர்களை உள்ளூராட்சி உறுப்பினராக நியமிப்பதற்கு அந்தஸ்து உள்ளவர்களை தேடித்திரிகின்றனர்.

## உள்ளூராட்சி...

இதற்கும் தமக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என அவர்கள் தெரிவித்தனர்.

உள்ளூராட்சி தேர்தல் தொடர்பாக அரசாங்கம் காட்டிய ஆர்வம் அவசரம் என்பனவற்றை இவ் உள்ளூராட்சி சபைகளை செயல்படுத்தும் விதத்தில் காட்டவில்லை என கட்சிகள் தெரிவிக்கின்றன.

நியமனப் பத்திரம் தாக்கல் செய்தவுடன் குறுகிய கால தேர்தல் நடைபெற அரசாங்கம் வழிவகுத்தது, ஆனால் தேர்தல்நடைபெற்று நீண்ட காலமாக சபை இயங்காமல் இருப்பதாக தமிழ் கட்சிகள் தெரிவிக்கின்றன,

# ஊழலுக்குக்காரணம் காங்கிரஸ் ஆட்சியே

## - அத்வானி

நாட்டில் ஊழல்' வறுமை தீவிரவாதம் ஏற்படுவதற்கு கடந்த நாற்பத்தைந்து ஆண்டுகள் நாட்டை ஆண்ட காங்கிரஸ் கட்சிதான் காரணம் என பாரதீய ஜனதாக் கட்சித் தலைவர் எல். கே. அத்வானி குற்றஞ் சாட்டியுள்ளார்.

ஒரிஸா மாநிலத்தில் நடந்த பிரச்சாரக் கூட்டமொன்றில் உரையாற்றிய, அவர் இதற்காக காங்கிரஸ் கட்சி நாட்டு மக்களிடம் மன்னிப்புக் கேட்க வேண்டுமெனவும் கேட்டுள்ளார்

கடந்த இருபது ஆண்டுகளுக்கு முன் தீவிர வாதம் என்றால் என்ன என்று தெரியாத இந்தியாவில் இன்று தீவிரவாதம் ஏற்பட்டதற்கு காங்கிரஸ் கட்சியின் சுயநலப் போக்கே காரணம் எனவும் அவர் குறிப்பிட்டார்

## சறோஜினி..

தார்,

மின்சார விநியோகம், நீர் விநியோகம் வீதி அமைப்பு போன்றவற்றுக்கான வேலைத் திட்டங்களையும், அதற்கான செலவு விபரங்களையும் தனக்கு அறிவிக்கும்படி அமைச்சர் கேட்டுக் கொண்டார்,

## ராமமூர்த்தி...

உறுப்பினரின் வாக்கு மூலமும் பெறப்பட்டதாக பொலீஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை பரராளுமன்ற உறுப்பினர் என். ஆர், ராமமூர்த்தி தேசிய மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் இது தொடர்பாக முறைப்பாடு செய்துள்ளார்.

# நெல் சூடு அடிக்க படையினர் தடை

மட்டக்களப்பு வவுணதீவுப் பகுதியில்மக்கள் இரவுவேளையில் நெல் சூடு அடிப்பதற்கு படையினர் தடைவிதித்துள்ளனர்,

இப்பகுதி நெல்வயல்களில் விவசாயிகள் இரவு 7 மணிக்குபின் சூடடிப்பில் ஈடுபடக்கூடாது என படையினர் உத்தரவிட்டுள்ளனர், இதனால் அப்பகுதி மக்கள் பெரும் சிரமங்களை எதிர் நோக்கியுள்ளனர்,

மட்டக்களப்பு பகுதி மக்கள் பொதுவாக இரவில் தான் சூடடிப்பது வழக்கம்' இவர்களுக்கு இராணுவத்தினரின் இப்புதிய கட்டுப்பாடு பெரும் அசௌகரியத்தினை ஏற்படுத்தியுள்ளது'

## தொலைபேசி செயலிழப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் நேற்று தொலைபேசிகள் மீண்டும் இயங்க மறுத்து விட்டன. கிளிநொச்சி இராணுவ படைத்தளத்தில் விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தியதை அடுத்து செயல் இழந்த தொலைபேசி இரண்டு தினங்களுக்கு முன்னர்தான் சீர் செய்யப்பட்டது.

''சூரிய காந்தி'' நிறுவனத்துக்காக அவர்களது அச்சகத்தில் 1998ம் ஆண்டு பிப்ரவரி 18ம் தேதி 68/1, ராசாவின் தோட்டம் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. ஆசிரியர்: க. குமாரசாமி,